நகரமன்றம் குடியாத்தம் நாள் : 29.05.2019

# அறிவிப்பு

2019–ம் ஆண்டு மே மாதம் 29–ம் தேதி புதன் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகராட்சி தனி அலுவலர் அவர்கள் அறையில் நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள பொருள்களை முடிவு செய்ய நகரமன்றத்தின் சாதாரணக் கூட்டம் நடைபெறும்

**முன்னிலை :திருமதி.ஞா.உமாமகேஸ்வரி,பி.இ., நகரமன்ற தனி அலுவலர்**

# கூட்டநிரல்

1. நகராட்சிக்கு சொந்தமான JCB 3DX வாகனம் TN23 BU2873 வண்டிக்கு கேப் ரூப் (CAB ROOF) மற்றும் லைட்கள் கொள்முதல் செய்யும் பணிக்கு TRR AUTOMOTIVE என்ற நிறுவனத்தின் மூலம் பொருட்கள் வாங்க ஆகும் செலவினம் ரூ.34,526/– மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று அரசு அங்கீகாரம் பெற்ற TRR நிறுவனத்திடமிருந்து JCB வாகனத்திற்கு தேவையான பொருட்கள் கொள்முதல் செய்யவும் மேற்படி தொகையை வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.1458/2019/எச்1)

2. இந்நகராட்சியில் ஒப்பந்த பணிகளில் பிடித்தம் செய்து வைக்கப்படும் வைப்புத் தொகைகள் ஒப்பந்ததாரர்களின் விண்ணபத்தின் பேரில் சம்மந்தப்பட்ட பிரிவு அலுவலர்களின் குறிப்பின்படி, வைப்பு நிதியிலிருந்து தொகை திரும்ப வழங்கப்பட்டு வருகிறது. தற்போது திரு.V.E.கருணா என்பவர் தனது 23.04.2019–ம் தேதிய கடிதத்தில் தனது பெயரில் உள்ள வைப்புத் தொகை ரூ.15,000/–ஐ திரும்ப வழங்க கோரியுள்ளார். மேற்படி வைப்புத் தொகை 2012–2013–ம் ஆண்டு காலங்கடந்து உள்ளதால் அத்தொகையினை திரும்ப வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1140/2019/எச்3)

**3.** குடியாத்தம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள அனுமதி பெறாத மனைப்பிரிவுகளை, தமிழக அரசு அறிவித்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவுகள் (ம) மனைகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017–18 ன் கீழ் ஏற்கனவே 20.10.2016 ம் தேதிக்கு முன் விற்பனை செய்யப்பட்டு பத்திரப்பதிவு செய்யப்பட்ட தனித்த குடியிருப்பு மனைகளை வரன்முறைப்படுத்திட ஆன்லைனில் விண்ணப்பம் செய்ய தவறியவர்களுக்கு தற்போது அரசாணை (நிலை) எண்.21,வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, ந.வ.4(3),நாள். 05.02.2019 இல் கால அவகாசம் வழங்கி வெளியிடப்பட்ட அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** .மேற்படிஅரசாணையில் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஏற்கனவே பத்திரப்பதிவுச் செய்யப்பட்டுஇணைய தளத்தில் பதிவு செய்யப்படாமல் உள்ள மனைகளுக்கு ஒப்புதல் அளிக்க கீழ்க்காணுமாறு நிபந்தனைகள் /அறிவுரைகள் வழங்கப்பட்டன.

1. **04.11.2018 முதல் 03.05.2019 வரை பெறப்படும் விண்ணப்பங்களுக்கு**

வரன்முறைப்படுத்துதல் கட்டணம் 1 சதுர மீட்டருக்கு ரூ. 66.00 வீதம் அரசுகணக்கு தலைப்பில் பாரத மாநில வங்கியில் செலுத்தப்பட்ட ரசீது நகல் ,பெறப்பட்ட பின்பு வளர்ச்சி கட்டணம் 1 சதுர மீட்டருக்கு ரூ. 150.00 வீதம் நகராட்சி கணக்கில் செலுத்தினால் உரிய நிபந்தனைகளுக்குட்பட்டு ஏற்கனவே பத்திரப்பதிவுச் செய்யப்பட்ட மனைகளுக்கு இறுதி ஒப்புதல் அளிக்க அனுமதி வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. **04.05.2019 முதல் 03.11.2019 வரை பெறப்படும் விண்ணப்பங்களுக்கு**

வரன்முறைப்படுத்துதல் கட்டணம் 1 சதுர மீட்டருக்கு ரூ. 75.00 வீதம் அரசுகணக்கு தலைப்பில் பாரத மாநில வங்கியில் செலுத்தப்பட்ட ரசீது நகல் ,பெறப்பட்ட பின்பு வளர்ச்சி கட்டணம் 1 சதுர மீட்டருக்கு ரூ. 150.00 வீதம் நகராட்சி கணக்கில் செலுத்தினால் உரிய நிபந்தனைகளுக்குட்பட்டு ஏற்கனவே பத்திரப்பதிவுச் செய்யப்பட்ட மனைகளுக்கு இறுதி ஒப்புதல் அளிக்க அனுமதி வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. **04.11.2019 க்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களுக்கு**

வரன்முறைப்படுத்துதல் கட்டணம் 1 சதுர மீட்டருக்கு ரூ. 90.00 வீதம் அரசுகணக்கு தலைப்பில் பாரத மாநில வங்கியில் செலுத்தப்பட்ட ரசீது நகல் ,பெறப்பட்ட பின்பு வளர்ச்சி கட்டணம் 1 சதுர மீட்டருக்கு ரூ. 150.00 வீதம் நகராட்சி கணக்கில் செலுத்தினால் உரிய நிபந்தனைகளுக்குட்பட்டு ஏற்கனவே பத்திரப்பதிவுச் செய்யப்பட்ட மனைகளுக்கு இறுதி ஒப்புதல் அளிக்க அனுமதி வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஏற்கனவே விற்பனை செய்யப்பட்ட மனைகளுக்கு பதிவுக்கட்டணமாக ரூ.500.00 ஐ Member-Secretary ,CMDA in account no.1000034132198 with IFSC Code No. INDB0000328,in M/s.IndusInd Bank, T.Nagar Branch,Chennaiதலைப்பில் வங்கியில் செலுத்தி அதன் விவரத்துடன் தனி நபர்களிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்டால் மேற்காணும் அரசாணையில் தெரிவித்த காலத்தில் அதற்கான வரன்முறைக்கட்டணம் வசூலித்தும், அதற்கான தனி பதிவேடுகள் பராமரித்து மனைகளை வரன்முறைப்படுத்த மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண். 680 /2019/எப்.1)

4. குடியாத்தம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள – அனுமதியற்ற மனைப்பிரிவுகள் (ம) மனைகளை வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017–18ன் கீழ்குடியாத்தம் வட்டம், குடியாத்தம் நகராட்சி, வார்டு எண். 03, பிளாக் எண்.13, நகர நிலஅளவை எண்கள் . 1124/1,1125/1 , 1126/1, 2 (பகுதி) கொண்ட இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை, நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ( பொ ), வேலூர் மண்டலம் அவர்களின் கடிதம் ந.க. எண். 4817/2018 வேம3 . நாள் :14.03.2019 ல் மனைப்பிரிவு வரன்முறை படுத்துதல் எண்.165(R)/2018ல் வரன்முறைப்படுத்தி ஒப்புதல் வழங்கப்பட்டு பெறப்பட்ட மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்க மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிது.

**அலுவலக குறிப்பு :-**(அ) . 1) அரசாணை (நிலை) எண். 78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை ந.வ.4(3),நாள். 04.05.2017, 2)அரசாணை (நிலை) எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை ந.வ.4(3),நாள். 13.10.2017 மற்றும் 3) அரசாணை (நிலை) எண்..55,வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை ந.வ.4(3),நாள் : 02.05.2018 ஆகிய மூன்று அரசாணைகளில் தெரிவித்த வழிகாட்டுதலின் படி, நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), வேலூர் மண்டலம் அவர்களின் கடிதத்துடன் பெறப்பட்ட குடியாத்தம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 03, பிளாக் எண்.13, நகர நிலஅளவை எண்கள் . 1124/1,1125/1 , 1126/1, 2 (பகுதி) கொண்ட இடத்தில் அமைந்துள்ள 91 மனைகள் கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவு ஏற்படுத்தப்பட்டு அதில் 89 மனைகள் ஏற்கனவே விற்பனை செய்யப்பட்டும், மீதமுள்ள 2 மனைகள் விற்பனை செய்யப்படாமல் உள்ளதை அடுத்து தமிழக அரசின் அனுமதியற்ற மனைப்பிரிவுகள் மற்றும் மனைகள் வரன்முறைப்படுத்தும் திட்டம் 2018ன் கீழ் வரன்முறைப்படுத்தி ம.வ/ ந.ஊ.து.இ. (வே.ம) வரன்முறை படுத்துதல் எண். 165(R)/2018ல்எண்ணிடப்பட்டு மனை வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதன் பேரில், நகராட்சி மற்றும் அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டண விவரங்கள் மனுதாரர் திரு.சையத் தைபூ அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டதின் பேரில்,

I. வரன்முறைப்படுத்துதல் கட்டணம் 1 சதுர மீட்டருக்கு ரூ. 66 வீதம் விற்கப்படாமல் உள்ள 2 மனைகளுக்கு 1586.00 ச.அடி ( 147.34 ச.மீட்டர்) ரூ. 8,880/– அரசு கணக்கு தலைப்பில் 08.04.2019 அன்று பாரத மாநில வங்கியில் செலுத்தப்பட்டது.

II. வளர்ச்சி கட்டணம் 1 சதுர மீட்டருக்கு ரூ. 150 வீதம் விற்கப்படாமல் உள்ள 2 மனைகளுக்கு 1586.00 ச.அடி ( 147.34 ச.மீட்டர்) ரூ.22,000/– நகராட்சி கணக்கில் செலுத்துச் சீட்டு எண். 92311, நாள்: 05.04.2019 இல் செலுத்தப்பட்டது.

(ஆ) பூங்காவிற்காக இம்மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட இடம் நகராட்சிக்கோ, பொதுமக்களுக்கோ பயன்படாத நிலையில் ( 3.5 அடி அகலமும், 52 அடி நீளமும் ) (மனை எண். 30 பகுதி ) 182.00 சதுரஅடி இடம் பொது ஒதுக்கீடு (பூங்கா ) என ஒதுக்கீடு செய்யப்பட்டு வரப்பெற்றுள்ளது. இதனை மாற்றி தற்போதுள்ள நில மதிப்பு அடிப்படையில் கட்டணம் பெற்று நடவடிக்கை தொடர நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கும் , நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், அவர்களுக்கும் கடிதம் அனுப்பி அனுமதி பெற்று நில மதிப்பு அடிப்படையில் கட்டணம் பெற மன்றம் அனுமதி வழங்கலாம்.

(இ) மேற்படி அனுமதி பெறப்படுவதற்கு முன் மனுதாரரிடமிருந்து மேற்படி பரப்பளவிற்கான கட்டணத்தை ( சார்பதிவாளரின் மதிப்பு அடிப்படையில் ) முன் வைப்புத் தொகையாக வசூலிக்கவும் , அனுமதி வழங்க இயலாத நிலையில் மேற்படி முன்வைப்புத் தொகை மனுதாரருக்கு திரும்ப வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(இ) மேற்படி பெறப்பட்ட கட்டணங்களின் பேரில் விற்கப்படாமல் உள்ள மனை எண்கள். 29 (884.00 சதுரஅடி) மற்றும் 30பகுதி (884.00 – 182.00 = 702.00 சதுரஅடி), ஆக 1586.00 ச.அடி (147.34 ச.மீட்டர்) கொண்ட 2 மனைகளுக்கு

1. இந்த வரன்முறை உத்தரவு மனை எண்கள். 29 மற்றும் 30 பகுதி ஆகியவற்றை விற்பனை செய்வதற்கும், கட்டிட/திட்ட அனுமதி பெற ஆகிய பயன்பாட்டிற்கு மட்டுமே பொருந்தும்.
2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என கண்டறியப்பட்டால் தங்களின் மனை எண்கள். 29 மற்றும் 30 பகுதி க்கான கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்பட கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைக்கு வழங்கப்பட்ட அனுமதி எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.
3. செலுத்திய கட்டணங்களில் ஏதேனும் மாற்றம் இருப்பின் மனைப்பிரிவு உரிமையாளரால் மீள செலுத்தப்படவேண்டும்.
4. இம்மனையில் கட்டிடம் கட்ட விண்ணப்பம் சமர்ப்பிக்கும் போது இவ்வுத்தரவின் நகல் இணைக்கப்பட வேண்டும்.
5. இம்மனைக்கான வழங்கப்பட்ட உத்தரவு வேறு மனைகளுக்கு மாற்றத்தக்கதல்ல.என நிபந்தனைகளுடன் இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவிட மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.2957/2018/எப்1

5. குடியாத்தம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள – அனுமதிற்ற மனைப்பிரிவுகள் (ம) மனைகளை வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017–18ன் கீழ்குடியாத்தம் வட்டம், குடியாத்தம் நகராட்சி, வார்டு எண். 03, பிளாக் எண்.13, நகர நிலஅளவை எண்கள் . 1124/1,1125/1 , 1126/1, 2 (பகுதி) கொண்ட இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை, நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ( பொ ), வேலூர் மண்டலம் அவர்களின் கடிதம் ந.க. எண். 4817/2018 வேம3 . நாள் :14.03.2019 ல் மனைப்பிரிவு வரன்முறை படுத்துதல் எண்.165(R)/2018ல் வரன்முறைப்படுத்தி ஒப்புதல் வழங்கப்பட்டு பெறப்பட்ட இம்மனைப்பிரிவில் பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட இடம் நகராட்சிக்கோ, பொதுமக்களுக்கோ பயன்படாத நிலையில் ( 3.5 அடி அகலமும், 52 அடி நீளமும் ) (மனை எண். 30 பகுதி )182.00 சதுரஅடி இடம் பொது ஒதுக்கீடு (பூங்கா ) என ஒதுக்கீடு செய்யப்பட்டு வரப்பெற்றுள்ளது. இதனை மாற்றி தற்போதுள்ள நில மதிப்பு அடிப்படையில் கட்டணம் பெற்று நடவடிக்கை தொடர நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிது.

**<u>அலுவலக குறிப்பு :-</u>**இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 2957/2018/எப்1 , நாள்.08.04.2019 இல் சார்பதிவாளர், குடியாத்தம் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதற்கு, சார்பதிவாளர், குடியாத்தம் அவர்களின் கடிதம் ந.க.எண்.93/2019.நாள்.10.04.2018 ம் தேதிய கடிதத்தில் ,வார்டு எண். 03, பிளாக் எண்.13, நகர நிலஅளவை எண்கள் . 1124/1,1125/1 , 1126/1, 2 (பகுதி) கொண்ட இடத்திற்கு 09.06.2017 முதல் ஒரு சதுர அடி 605.00 என வழிகாட்டி மதிப்பு உள்ளது என தெரிவித்துள்ளதால் மனுதாரரிடம் தானமாக பெறப்படவேண்டிய 182.00 சதுர அடி இடத்திற்கு 182.00 x 605.00 = 110110.00 (எழுத்தால் ரூபாய் ஒரு இலட்சத்தி பத்தாயிரத்தி நூற்றி பத்து ) வைப்புத் தொகையாக வசூல் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.2957/2018/எப்1)

6. இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவின் மூலம் துப்புரவுப் பணிகள் செய்ய கிருமி நாசினி சுண்ணாம்பு நீர் மற்றும் பிளீச்சிங் பவுடர்போன்றவை தேவைப்படுவதாலும் மேலும், திருவிழா காலங்கள், கோவில் விழா, பொதுக் கூட்டம், சுகாதாரம் பாதிக்கும் இடங்கள் பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் அவசியம் தேவைப்படுவதால் கொள்முதல் செய்ய சுண்ணாம்பு நீர் - 5 டன் மற்றும் பிளீச்சிங் பவுடர் - 2 டன் ரு.96000/– ஆகும் செலவினம் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>** 1. மன்றம் அனுமதிக்காலம்.

2. அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டு கற்பகம் கூட்டுறவு நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்யவும், அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.3771/2017/எச்1)

7. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பிளாஸ்டிக் தடை, டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை, தனிநபர் கழிவறை கட்டுதல், திடக்கழிவு மேலாண்மை பணிகள் போன்ற திட்டங்கள் தொடர்பாக கலை நிகழ்ச்சிகள் நடத்திட 23.05.2019 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டமைக்கு வரப்பட்ட 3 விலைப்புள்ளிகள் விவரம் ஆணையரின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | கலை நிகழ்ச்சி நடத்திட நாள் ஒன்றுக்கு உண்டான தொகை | 13 நாட்களுக்கு உண்டான தொகை |
|---|---|---|---|
| 1. | சிவசக்தி கிராமிய கலைக்குழு,<br>நெ.55, அய்யா கவுண்டர் தெரு,<br>வாழப்பாடி தாலுகா,<br>சேலம் மாவட்டம். 636115 | ரூ.10000/- | ரூ.130000/- |
| 2. | ஜெயம் கலைக்குழு,<br>எண்.110, மாடசாமி தெரு,<br>வாழப்பாடி(வ), சேலம் மாவட்டம். | ரூ.11000/- | ரூ.143000/- |
| 3. | விஜி கலைக்குழு,<br>எண்.39, மாடவீதி தெரு,<br>தஞ்சாவூர், தஞ்சாவூர் மாவட்டம் | ரூ.12000/- | ரூ.156000/- |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளை குறைந்த விலைப்புள்ளி வழங்கிய வரிசை எண்.1 சிவசக்தி கிராமிய கலைக்குழு சேலம் மாவட்டம் என்ற நிறுவனத்திற்கு முடிவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசிய கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கவும் தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1483/2019/எச்1)

8. இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் பணிப்புரியும் பணியாளர்களுக்கு 2019-2020-ம் ஆண்டிற்கு தளவாட பொருட்கள் வழங்கவும் கெங்கையம்மன் திருவிழாவை முன்னிட்டும் பொது சுகாதார அவசர அவசியம் கருதியும் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தின் மூலம் மேற்படி பொருட்கள் வாங்க ஆகும் தோராய செலவினம் ரூ.2,60,000/- மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>** தேர்தல் நன்நடத்தை விதி அமளில் உள்ளதால் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் கிளை மேலாளர், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி கழகம், SIDCO தொழிற்பேட்டை, திருமாழிசை என்ற நிறுவனம் மூலம் பணிமேற்கொண்டதை மன்றம் பதிவு செய்யலாம்.(ந.க.எண்.1170/2016/எச்1)

9. நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செயல்முறையில் இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் தனியார் மயம் மூலம் 12 வார்டுகள் (16,17,27,28,29,30,31,32,33,34,35 மற்றும் 36) கொண்ட பகுதிகளில் துப்புரவுப் பணி தனியார் மயமாக்குதலுக்கு அனுமதி 3 ஆண்டுகளுக்கு பெறப்பட்டதன் பேரில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு திரு.லோகேஷ் என்பவர் பணி செய்து வருகிறார். தற்போது இப்பணி 02.06.2019 அன்றுடன் முடிவடைவதால் மீண்டும் 03.06.2019 முதல் ஓராண்டுக்கு

துப்புரவுப் பணிகள் தனியார் மயம் மூலம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டி மன்ற பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 1741/2012/எச்1)

10. இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான "S" Type நாற்காலிகள் 25 எண்ணிக்கை TANSI, VELLORE நிறுவனத்தில் கொள்முதல் செய்ய ஆகும் செலவினம் ரு.82,158/-க்கு மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று தளவாட பொருட்கள் கொள்முதல் செய்ததை மன்றம் அனுமதிக்கலாம்.ந.க.எண்.இ1/1589/2018

11. இந்நகராட்சிக்கு சொந்தமான பசுமாத்தூர் நீரேற்று நிலையத்திலிருந்து குடிநீர் விநியோகம் செய்யும் பிரதான நீர் உந்து குழாய் ஆர்.எஸ்.சாலை இரயில்வே இருப்புபாதையை கடந்து வருவதற்கான 10 ஆண்டு (2011-2021) பராமரிப்பு கட்டணத்தொகை ரு.1,34,225/-ஐ இரயில்வேதுறைக்கு செலுத்தக்கோரி செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், வேலூர் (Maintenance) கடித எண்.F.Railways/RDM.MPTY/JDO/2019 நாள்:05.03.2019-ல் தெரிவிக்கப்பட்டதன் பேரில் மேற்காணும் தொகை ரு.1,34,225/-ஐ இரயில்வே நிர்வாகத்திற்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண்.இ1/721/2019

12. குடியாத்தம் நகராட்சி – மக்களவை தேர்தல்-2019 – நகராட்சி அலுவலகத்தில் பொதுமக்கள் 100% வாக்களிக்க விழிப்புணர்வு ஏற்படுத்த தேர்தல் தொடர்பான வாசகம் பொருத்திய பெரிய அளவிலான பலூன் பறக்கவிட கோரியதன் பேரில் விலைப்புள்ளி கோரப்பட்டு வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | அளவு | Rainbow Balloons, Chennai-45 | Ganesh Balloons, Chennai-48 | Vanavil Balloon House, Chennai-59 |
|---|---|---|---|---|---|
| 1. | குடியாத்தம் நகராட்சி அலுவலகத்தில் பொது மக்கள் 100% வாக்களிக்க விழிப்புணர்வு ஏற்படுத்த தேர்தல் தொடர்பான வாசகம் பொருத்திய பெரிய அளவிலான பலூன் பறக்க விடுதல் | 1 | 63000.00 | 80000.00 | 120000.00 |
| **மொத்தம்** | | | **63000.00** | **80000.00** | **120000.00** |

**அலுவலக குறிப்பு:-**

1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி தொகை ரு.63,000/-ஐ வழங்கியுள்ள **Rainbow Balloons, Chennai-45**அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.
2. தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் உள்ளதனால் தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. தேர்தல் விழிப்புணர்வு செலவினம் ரு.63,000/-க்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**கோப்பு எண்:-** இ1/1589/2018

13. இந்நகராட்சிக்கு சொந்தமான TN23BU9822 வாகனத்தில் உள்ள பழுதடைந்த பழைய பேட்டரியினை கழிவு செய்து புதியதாக EY 700 12V பேட்டரி 1-எண்ணிக்கை கொள்முதல் செய்வதற்கு ஆகும் செலவினதொகை ரு.6950/-ஐ "**Vellore Battery Centre**" வேலூர் நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது

**அலுவலககுறிப்பு:-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று முன்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்

**கோப்பு எண்:-** இ1/1589/2018

14. இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு வானவில் தமிழ் தட்டச்சு மென்பொருள்(5Users) பயன்படுத்த ஆகும் செலவினம் ரு.26,550/- ((சேவைவரி உட்பட) ஆகும். மேற்காணும் தொகைக்கு மென்பொருள் Vanavil Software நிறுவனத்தில் கொள்முதல் செய்ய மன்ற நிர்வாக அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.**கோப்பு எண்:-** இ1/1589/2018

15. இந்நகராட்சியில் மாவட்ட பிரசித்திபெற்ற ஸ்ரீ கெங்கையம்மன் சிரசு திருவிழா மே-15-ந் தேதி நடைபெற உள்ளதால் திருவிழாவிற்கு வருகை தரும் பொதுமக்களுக்கு அடிப்படை வசதிகள் நகராட்சி தரப்பில் ஏற்படுத்திட மின்விளக்குகள், குடிநீர்வசதி மற்றும் தற்காலிக கழிப்பிடங்கள் ஆகியனவற்றை செயல்படுத்த ஆகும் உத்தேச செலவினம் ரு.3.60 இலட்சம் ஆகும். மேற்காணும் மதிப்பீட்டிற்கு பணியினை செயல்படுத்த தற்போது தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் இருப்பதால் மேற்படி பணியினை துறை மூலம் மேற்கொள்ளவும் அதற்கான செலிவன தொகையினை வழங்கவும் மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று பொதுப்பணி மேற்பார்வையாளர் மூலம் துறை ரீதியாக பணி மேற்கொண்டு ஆகும் செலவினத்திற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
3. வரவு செலவு திட்டம் 2019-20-ன் கீழ் ஒப்புதல் வழங்கலாம்.

**கோப்பு எண்:-** இ1/1589/2018

16. குடியாத்தம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியிலுள்ள சட்டமன்ற இடைத்தேர்தல் ஏப்ரல் மாதம் 18-ம் தேதி (18.04.2019) வியாழக்கிழமை அன்று நடைபெறுவதையொட்டி வாக்குச்சாவடி மையங்கள்-81 எண்ணிக்கைகளுக்கு தற்காலிக மின்விசிறிகள், மின்விளக்குகள், பிளாஸ்டிக் சேர் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்-20லிட்டர் சப்பைசெய்தல் மேற்படி பணிகள் செய்ய ஆகும் செலவீனம் ரு.67,000/- மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணி அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டு குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள திரு.ஜெ.ஜெ.ஆனந்தகுமார் ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொண்டு செலவீனத்திற்கு ஒப்புதல் அளிக்கலாம்.**கோப்பு எண்:-** இ1/1589/2018.

17. இந்நகராட்சி அலுவலகத்தில் மின்வாரியத்தின் மூலம் மின்சார நிறுத்தம் ஏற்படும் பொழுதெல்லாம் அலுவலகப்பணிகள் மேற்கொள்ள மிகவும் சிரமமாக உள்ளதால் தற்பொழுது போடிப்பேட்டை நீரேற்று நிலையத்தில் 1997-1998-ம் ஆண்டு பொருத்தப்பட்டு பயன்பாட்டில் இல்லாமல் பழுதடைந்து கைவசமுள்ள 82.5 KVA Kirloskar ஜெனரேட்டரை M/s Om Sakthi Trading Company மூலம் பழுதுபார்த்து இயக்க ஆகும் செலவீனம் ரூ.95,600/-க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடம் விலைப்புள்ளி கோரியதில் குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள M/s.Om Sakthi Trading Company மூலம் பணி உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதையையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்:-** இ1/1589/2018

18. இந்நகராட்சி அலுவலகத்தில் மின்வாரியத்தின் மூலம் மின்சார நிறுத்தம் ஏற்படும் பொழுதெல்லாம் அலுவலகம் பணிகள் மேற்கொள்ள மிகவும் சிரமமாக உள்ளதால் தற்பொழுது போடிப்பேட்டை நீரேற்று நிலையத்தில் 1997-1998-ம் ஆண்டு பொருத்தப்பட்டு பயன்பாட்டில் இல்லாமல் பழுதடைந்து கைவசமுள்ள 82.5 KVA Kirloskar ஜெனரேட்டரை பழுதுபார்க்க தேவையான Spares-Parts பொருட்கள் M/s Om Sakthi Trading Company மூலம் வாங்க செலவீனம் ரூ.75,497/- ஆகும் என்பதனை மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடம் விலைப்புள்ளி பெற்று குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள M/s.Om Sakthi Trading Company மூலம் Spares-Parts பொருட்கள் வாங்கி கொள்ள சப்ளை உத்தரவு வழங்கி, பணி மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்:-** இ1/1589/2018

19. இந்நகராட்சியில் மாவட்ட பிரசித்தி பெற்ற ஸ்ரீ கங்கையம்மன் சிரசு திருவிழாவிற்கு பொதுமக்களை நகராட்சி சார்பாக வரவேற்று கீழ்க்கண்ட தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்தமைக்கு ஆன செலவினதொகை ரூ.1,18,083/-ஐ கீழ்க்காணும் விளம்பர நிறுவனங்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. Express Publication(Madural) P,Ltd, Dinamani | - | Rs.23,940.00 |
| 2.The Daily Thanthi | - | Rs.23,940.00 |
| 3. Dinamalar | - | Rs.23,940.00 |
| 4. Kal Publication (Tamil Murasu) | - | Rs. 15,120.00 |
| 5. Kal Publication (Dinakaran) | - | Rs. 15,120.00 |
| 6. MalaiMalar | - | <u>Rs. 10,080.00</u> |
| Total | - | Rs.1,18,083.00 |

**<u>அலுவலககுறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம். **கோப்பு எண்:-** இ1/1589/2018

**தனி அலுவலர் / ஆணையர்(பொ),**
**குடியாத்தம் நகராட்சி.**

<u>குடியாத்தம் நகராட்சி</u> நாள் . 24.05.2019

<u>திரையிடல் குழு கூட்ட அறிவிப்பு</u>

2019 ம் ஆண்டு மே மாதம் 29 ம் தேதி புதன் கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகராட்சி தனி அலுவலர் அவர்கள் அறையில் நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள பொருள்களை முடிவு செய்ய திரையிடல் குழு கூட்டம் நடைபெறும்.

<u>முன்னிலை திருமதி.ஞா . உமாமகேஸ்வரி பி.இ, நகராட்சி தனி அலுவலர் (ம) ஆணையாளர் (பொ)</u>

<u>கூட்ட நிரல்</u>

பொருள் எண் 1 : குடியாத்தம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வழங்கப்படும் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி நடைமுறைகள் தொடர்பாக 04.02.2019 அன்று வெளியிடப்பட்ட தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் – 2019 குறித்தான அரசாணை எண். 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை திரையிடல் குழுவின் பார்வைக்கும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு.</u>

அ, திரையிடல் குழு பதிவு செய்யலாம்.

ஆ. அரசாணை வெளியிடப்பட்ட நாளான 04.02.2019 முதல் மேற்படி தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் – 2019 ல் தெரிவிக்கப்பட்ட விதிகள் மற்றும் வழிமுறைகளைப் பின்பற்றி கட்டணங்கள் வசூலிக்க குழு அனுமதி அளிக்கலாம்.

இ. ஏற்கனவே குடியாத்தம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வழங்கப்படும் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி தொடர்பாக குடியாத்தம் நகரமன்றத் தீர்மானம் எண்.15, நாள்.06.01.2017 ல் வழங்கப்பட்ட அனுமதியின் பேரில் வசூலிக்கப்பட்டு வரும் கட்டட உரிமம் கட்டணத்திற்கும் , தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் – 2019 ல் தெரிவிக்கப்பட்ட கட்டணத்திற்கும் உள்ள வித்தியாச கட்டணங்களை வசூலிக்க குழு அனுமதி அளிக்கலாம்.

ஈ. விதி எண். 30(1), (2) இல் குறிப்பிட்டுள்ளவாறு இந்நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள அறிவிக்கப்பட்ட குடிசைப்பகுதி மற்றும் அறிவிக்கப்படாத குடிசைப்பகுதி உள்ள (Notified Slums & Un-Notified Slums) பகுதிகளைபொருளாதாரத்தில் நலிவடைந்தோர் பகுதியாக ( Economy Weaker Section) கருதவும், மற்ற பகுதிகளில் தொடர் கட்டுமான பகுதி ( Continuous Building area) மற்றும்பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் பகுதி ( Economy Weaker Section) ஆகியவற்றை நகர் ஊரமைப்பு இயக்குனர் அவர்களின் வழிகாட்டுதலின் படி கண்டறிந்து அவற்றின் சர்வே எண்கள் மற்றும் தேவையான விவரங்களை நகர் ஊரமைப்பு இயக்குனர் அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்பி வைத்ததற்கு குழு அனுமதி அளிக்கலாம்.

உ. தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் – 2019 இன் விதி 14 இல் கட்டடஅனுமதி காலம் 5 ஆண்டுகள் என கால நிர்ணயம் செய்துள்ளதால் தற்போது நடைமுறையில் உள்ள 3

ஆண்டுகளுக்கான கட்டணத்தை 5 ஆண்டுகளுக்கான கட்டணமாக கணக்கிட்டு வசூலிக்க குழு அனுமதி அளிக்கலாம்.

ஊ. விதி எண். 7 இல் குறிப்பிட்டுள்ளவாறு இந்நகராட்சியில் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வழங்கப்படும் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி தொடர்பாக கட்டட விண்ணப்பங்கள் மீது கூராய்வுக்கட்டணமாக கட்டட அனுமதி வழங்க கோரும் பரப்பிற்கு, ஒரு சதுர மீட்டருக்கு ரூ.2.00 வீதம் கணக்கிட்டு வசூல் செய்யவும் குழு அனுமதி அளிக்கலாம்.

எ. குடியாத்தம் நகரமன்றத் தீர்மானம் எண்.15, நாள்.06.01.2017 ல் வழங்கப்பட்ட அனுமதி காலத்தை 3 ஆண்டுகள் என்பதை மாற்றி 5 ஆண்டுகள் என மாற்றம் செய்து திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க குழு அனுமதி அளிக்கலாம்.

ஏ. (1) விதி எண். 23(1)(எ) இல் குறிப்பிட்டுள்ளவாறு இந்நகராட்சியில் பதிவுபெற்ற பொறியாளர்களுக்கான பதிவுக்கட்டணம். ரூ.5000/- வசூலிக்க தெரிவிக்கப்பட்டள்ளதையும், அவர்களுக்கு வழங்கப்படும் அனுமதி காலம் 5 ஆண்டுகள் என தெரிவிக்கப்பட்டள்ளதையும் நடப்பு ஆண்டு 2018-19 முதல் மாற்றம் செய்து வசூலிக்கவும் , வித்தாச கட்டணங்களை வசூல் செய்யவும் குழு அனுமதி அளிக்கலாம்.

(2) மேலும் புதுப்பிக்கும் கட்டணம் தற்போது உள்ள ஓர் ஆண்டு கட்டணத்தை 5ஆண்டுகளுக்கு கணக்கிட்டு நடப்பு ஆண்டு (2018-19) முதல் வசூலிக்கவும் குழு அனுமதி அளிக்கலாம்.

ஐ. விதி எண். 7(5) இல் குறிப்பிட்டுள்ளவாறு இந்நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் பகுதிகளில் ( Economy Weaker Section) 40 சதுர மீட்டர் ( 430.00 சதுர அடி) பரப்பளவிற்குள் கட்டப்படும் கட்டங்களுக்கு மட்டும் கூராய்வுக்கட்டணம் வசூலிக்க விலக்களிக்கப்பட்டுள்ள விவரம் குழுவின் தகவலுக்கு .

ஒ. விதி எண். 17 இல் குறிப்பிட்டுள்ளவாறு இந்நகராட்சி எல்லைக்குள் பகுதிகளில் செயல்படுத்தப்படும் முழுமைத்திட்டம் (MasterPlan ), விரிவு அபிவிருத்தி திட்டங்களில் ( Detailed Development Plan ) ஆகியவற்றில் பயன்பாட்டு பகுதிகளாக ( Usage Classification) பதிவு செய்யப்பட்ட பகுதிகளை 11 இனங்களுக்கு தற்போது வெளியிடப்பட்டுள்ள தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் – 2019இல் குறிப்பிட்டுள்ளவாறு பயன்பாட்டு பகுதிகளாக மாற்றம் செய்து நடைமுறைப்படுத்த குழு அனுமதி அளிக்கலாம்.

ந.க.எண். 545 /2019/எப்.1

பொருள் எண் 2 : குடியாத்தம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வழங்கப்படும் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி நடைமுறைகள் தொடர்பாக 04.02.2019 அன்று வெளியிடப்பட்ட தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் – 2019 குறித்தான அரசாணை எண். 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையால் வழங்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் வழிமுறைகளை பின்பற்றி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஏற்கனவே கடந்த ஆண்டுகளில் கட்டட வரைப்படவாளர் உரிமம் பெற்ற கீழ்வரும் வரைப்படவாளர்கள் 2019–2024 ஆகிய 5 ( ஐந்து ) ஆண்டுகளுக்கு உரிமம் வழங்கக் கோரி விண்ணப்பம் மற்றும் ஆவணங்கள் சமர்ப்பித்துள்ள விவரம் குழுவின் பார்வைக்கும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | கட்டிட வரைப்படவாளர் பெயர் | கல்வித்தகுதி | அனுபவம் ( ஆண்டு களில்) | நகராட்சியில் கட்டிட வரைப்படவாளர் அனுமதி எந்த ஆண்டு முதல் பெற்றுள்ளார் | உரிமம் வழங்க வேண்டிய நிலை (Grade) |
|---|---|---|---|---|---|
| 1 | திரு. எம்.எஸ்.சந்திரசேகரன் . | டிசிஇ | 28 | 1990 | பொறியாளர் நிலை 3 |
| 2 | திரு. ஆர்.விக்னேஷ் | டிசிஇ/பிஇ | 07/03 | 2014 | பொறியாளர் நிலை 2 |
| 3 | திரு. இ.விக்னேஷ் | பிஇ | 04 | 2017 | பொறியாளர் நிலை 2 |
| 4 | திரு. கே.வாசுதேவன் | டிசிஇ | 20 | 2002 | பொறியாளர் நிலை 3 |
| 5 | திரு. ஆர்.அன்பு | டிசிஇ | 24 | 2002 | பொறியாளர் நிலை 3 |
| 6 | திரு. ஜி.தேவராஜ் | டிசிஇ /பிஇ | 11/07 | 2009 | பொறியாளர் நிலை 2 |
| 7 | திருமதி.எம்.லோகேஷ்வரி | டிசிஇ | 14 | 2014 | பொறியாளர் நிலை 3 |
| 8 | திரு. ஆர்.ஜெயமணி பாபு | டிசிஇ | 10 | 2010 | பொறியாளர் நிலை 3 |
| 9 | திரு. எஸ்.தேவராஜன் | டிசிஇ | 18 | 2006 | பொறியாளர் நிலை 3 |
| 10 | திரு. இ. ஜெயராமன் | டிசிஇ | 29 | 2001/2016 | பொறியாளர் நிலை 3 |
| 11 | திரு. எஸ்.தயாளன் | டிசிஇ | 43 | 1980 | பொறியாளர் நிலை 3 |
| 12 | திரு. எஸ். வேலு | பிஇ | 26 | 2008 | பொறியாளர் நிலை 1 |
| 13 | திரு. எஸ். பிரபு | பிஇ | 10 | 2018 | பொறியாளர் நிலை 1 |
| 14 | திரு. ஆர்.ஹரிகிருஷ்ணன் | டிசிஇ | 22 | 2017 | பொறியாளர் நிலை 3 |
| 15 | திரு. எம்.சுரேஷ் பாபு | டிசிஇ /பிஇ | 18/05 | 2001 | பொறியாளர் நிலை2 |
| 16 | திரு. எஸ்.சதீஷ் | டிசிஇ/பிடெக் | 17/06 | 2003 | பொறியாளர் நிலை 2 |
| 17 | திரு. எஸ்.சுதாகர் | டிசிஇ | 23 | 2002 | பொறியாளர் நிலை 3 |
| 18 | திரு. பி.சிவப்பிரகாசம் | டிசிஇ | 17 | 2014 | பொறியாளர் நிலை 3 |
| 19 | திரு. இ. பாலமுரளிகிருஷ்ணன் | டிசிஇ | 20 | 2004 | பொறியாளர் நிலை 3 |
| 20 | திரு. என். ஜீவரத்தினம் | பிஇ | 29 | 1990 | பொறியாளர் நிலை 1 |
| 21 | திருமதி. கே.வேணி | டிசிஇ/பி.டெக் | 16/09 | 2010 | பொறியாளர் நிலை 2 |
| 22 | திரு. பி. ஜெயக்குமார் | டிசிஇ | 10 | 2009 | பொறியாளர் நிலை 3 |
| 23 | திரு. ஜி. பழனி | டிசிஇ | 07 | 2012 | பொறியாளர் நிலை 3 |

**<u>அலுவலக குறிப்பு.</u>**

அ, மேற்படி பொறியாளர்களின் கல்வித்தகுதிக்கு வழங்கப்படவேண்டிய நிலையில் (Grade) உரிமம் வழங்கலாம்.

ஆ. மேற்படி பொறியாளர்கள் இணையதள வாயிலாக விண்ணப்பம் மற்றும் கட்டணங்கள் செலுத்தப்பட்ட விவரத்தின் அடிப்படையில் விண்ணப்பதாரர்களின் கல்வித்தகுதிக்கு வழங்கப்படவேண்டிய நிலையில் (Grade) உரிமம் வழங்கி அதன் விவரத்தை குழுவிற்கு பொருள் வைத்து அனுமதி பெறலாம்.

இ. மேற்படி பொறியாளர்களுக்கு வழங்கப்பட்ட உரிமம் ஒவ்வொரு ஆண்டும் புதுப்பிக்க அவர்களிடம் தொழில் வரி செலுத்திய விவரம் பெற்று அதன் விவரத்தை குழுவிற்கு பொருள் வைத்து அனுமதி பெறலாம்.

ந.க.எண். 545 /2019/எப்.1

ஆணையாளர்/தனிஅலுவலர்

குடியாத்தம் நகராட்சி